229

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி க. } சௌமியஹு மார்கழிமீ { பகுதி கூ.

ரோஜா.

—:o:—

"பூவெனப்படுவது *பொறிவாழ் பூவே" என்று தாமரையையும், "புஷ்பேஷு ஜாதி" என்று ஜாதி புஷ்பத்தையுமே பரதகண்டத்துப் புலவர் பெருமக்கள் மலர்களிற் சிறந்தனவாக மகிழ்ந்துரைப்பர். ஜாதி புஷ்பம் மணத்திலும் தாமரைமலர் அழகிலும் சிறந்து விளங்குவதால் அவ்விருமலர்களுமே நம் ஆன்றோர்களால் அருமை பெருமையாக மதிக்கப்பட்டனபோலும். ஆயினும் சிறந்த அழகும் திவ்ய பரிமளமும் ஒருங்கே அமைந்துள்ள ஓர் மலர் உண்டு. அஃது இவ்விருகுணங்களும் நிரம்பி இலங்குவதால் அதனை இக்காலத்தார் "புஷ்பராணி" எனப்புகழ்ந்து கூறுவர். இவ்வழகிய நறுமலர் யாவராலும்விரும்பப்பட்ட "ரோஜா" வேயாம். இஃது ஆதியில் இந்தியாவில் இல்லாதிருந்த காரணம்பற்றியே இது நம்முன்னோர்களால் நம் நாட்டுப்பழைய நூல்களிலும், காவியங்களிலும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. நம்மவர்கள் தாமரையை எவ்வளவு மேன்மையாகச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்களோ அவ்வளவு மேன்மையாக ரோஜாவை மேலைத்திசையோர் வர்ணித்திருக்கின்றனர். மில்டன், ஷெல்லி, டெனிஸன், ஷேக்ஸ்பியராதியோரது நூலை வாசித்தோர்க்கு அப்புலவர்கள் இம்மலரில் வைத்துள்ள மதிப்பு நன்கு விளங்கும். நிற்க.

உற்பத்தி:—உலகத்தில் பல இடங்களில் காடுகளில் மானுஷக்கிருஷியின்றியே ரோஜாச்செடி பயிராகின்றனவாயினும் அவற்றில் புஷ்பிக்கும் மலர்கள், நாடுகளில் தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்படும் செடிகளில் உண்டாகும் மலர்களைக்காட்டிலும் பருமன், அழகு, மணம் முதலியவற்றில் குறைந்தனவாகவே இருக்கும். ரோஜாச்செடியில் 250 வகையுண்டு. ரோஜா ஆசியா கண்டத்தில் இந்தியா பாரவஸீகம், துருக்கி, சீனு முதலிய இடங்களிலும், ஆப்பிரிக்காவில்

* பொறி = இலக்குமி.

ஈஜிப்ட் முதலிய இடங்களிலும், ஐரோப்பாவில் பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய இடங்களிலும், அமெரிக்காவில் சில பாகங்களிலும், தோட்டங்களில் மிகுதியாகப் பயிராக்கப்படுகிறது. சீமையில் ரோஜா இல்லாத தோட்டமே கிடையாது. இந்தியாவில் உள்ள பாடலிபுரம் (பாட்ணு) லவபுரம்(லாகூர்) காஸிபுரம் (காஸிப்பூர்) முதலிய பட்டினங்களும், குலிஸ்தான் என்னும் நாடும், பாரஸீகத்திலுள்ள ஷிராஸ் என்ற நகரமுமே ரோஜாவிற்கு பேர்பெற்றனவை. குலிஸ்தான் என்னும் நாடு பங்காளத்தில் உள்ளது. "குலிஸ்தான்" என்பதற்கே "ரோஜாத்தோட்டம்" என்பது பொருள். அந்நாடுமுழுவதிலுமே ரோஜாச்செடி பயிராவதால் அதற்கு இப்பெயர் கிடைத்தது. அந்நாட்டிற்கு அருகில் உள்ள ஓர் உன்னதமான இடத்தில் நின்று இதனைக்காணும் காட்சி அதிஅற்புதக்காட்சியாகும். நாற்புறமும் நறுமணம் வீசி நேத்திரானந்தத்தை விளைக்கும் இப்பூக்காவனம் அங்கிருந்து பார்ப்பவர் கண்ணுக்குப் பூமி முழுதும் புஷ்பங்களாலேயே மூடப்பட்டதுபோற் புலப்படும்.

இயற்கை விசேஷங்கள்:—ரோஜா மரமன்று அது செடியாகவும் புதராகவுமே வளரும் நன்றாய் வளர்க்கப்படின் அது எட்டடிவரை உயரும். இச்செடிகளுக்குக் கூரிய முட்களுண்டு எவ்வளவுக்கெவ்வளவு ரோஜாமலர் அதிக நேர்த்தியும், வனப்பும் வாய்ந்துள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு முள்ளும் கூர்மையாக இருக்கும். மற்றச்செடிகளாலும், கொள்ளைக்காரர்களாலும் அதிகமாகத்தீங்கு நேரிடாவண்ணம் அது தன்னைக்கூடியவரை தற்காத்துக்கொள்ளும்பொருட்டே சர்வக்ஞராகிய கடவுள் அதற்கு முள்ளை ஓர் தடுபடையாகக் கொடுத்திருக்கின்றார். மலர்க்காம்பிலும், அதற்கருகிலும் பிசுபிசுப்புள்ள ஓர் வகை மயிருண்டு. இம்மயிர்கள் இச்செடிக்குப் பிடித்தமில்லாத ஜந்துக்களை அணுகவொட்டாமல் அப்புறப்படுத்தவே சிருஷ்டிக்கப்பட்டவை. ஆயினும் இச்செடிக்கிசைந்த பிராணிகளை அது தன் வசப்படுத்திக்கொள்ளுமாறு அதன் மலர்க்கு நிறமும், மணமும் நேர்த்தியும் கொடுபட்டிருக்கின்றன. ரோஜாச்செடி அதன் மலரினின்றும் எடுபடும் பரிமள அத்தர்க்காகவும் பனிநீரின் பொருட்டுமே பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. இம்மலர்கள் சித்திரை வைகாசி மாதங்களிற்றான் மிகுதி. அவற்றின் நிறம் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் எனப்பலவகைப்படும் உஷ்ணதேசங்களில் உண்டாக்கப்படும் ரோஜா சீதளநாட்டு மலர்களைக்காட்டிலும் சகலவிதத்திலும் உயர்ந்தனவாகவே இருக்கும்.

பனிநீர் செய்யும் விதம்:—ஓர் நீளச்சிறுகுழாய் பதிப்பிக்கப்பெற்றதும் வாய் குறுகியதுமான ஓர் பாத்திரத்தில் தண்ணீர் பெய்து ரோஜாமலர்களை அவை புது நறுமணத்துடன் இருக்கும்பொழுதே கொய்து அதிற்போட்டு மூடி, அக்குழாயின் மறுநுனியை எற்கனவே நன்றாகக் குளிரவைத்துள்ள ஓர் பாத்திரத்திற் செருகி,

மலரும் நீருமுள்ள பாத்திரத்தைக் காய்ச்சினால் அப்பொழுது எழும் நீராவி, குழாயின் வழியாய்க் குளிர்ச்சியுறச் செய்துள்ள பாத்திரம் போய்சேர்ந்து, வாயு உரு நீங்கித் திரவ ரூபம அடையும். இத்திரவமே பனிநீர். 1000 நறும்புதுமலர்களிலிருந்து 'அசல்' பனிநீராக 3 வீசம்படியே எடுக்கலாகும்.

அத்தர் செய்யும் விதம்:—முற்கூறியவாறு சுத்தமாய்க் காய்ச்சி வடிகட்டி இறக்கிய பனிநீரை வாய் அகன்ற தொட்டிகளில் வார்த்து அத்தொட்டிகளைத் திறந்தவெளியில் சிலநாள்வைத்திருந்தால் இராக் காலங்களில் அப்பனிநீர்ப் பரப்பில் சிறுசிறு துளிகளாக ஒருவகைத தைலம மிதக்கவும் தொட்டியோரத்திற் படியவும் காண்போம் இத் தைலமே விலையேறப்பெற்ற அத்தர்.

இத்தைலத்தை யாதாலும் ஓர் சுத்தமான இறகுகொண்டு அதி ஜாக்கிரதையாய் ஒற்றி எடுக்கவேண்டும். ஒரு ரூபாய் நிறையுள்ள தனி அத்தர் அது எடுபடும் இடத்திலேயே 100 ரூ முதல் 150 ரூபாவரை விலைபோகிறதாம். 200000 புஷ்பங்கள் இருந்தால்தான் ஒரு ரூபா எடையுள்ள சுயஅத்தர் கிடைக்கும். 2000 செடிகளாவது இருந்தால்தான் 2 லட்சம் புஷ்பங்கள் பெறலாம். ஆகையால், ஆராயின், அதற்காகக் கொடுபடும் 100 ரூபாய் ஓர் அதிகத்தொகையாக மாட்டாது. இவ்ரோஜா அத்தரை "ஜிகாங்கீர் அத்தர்" என்றும் சொல்வதுண்டு. இதற்குக்காரணம் பின்வருமாறு சொல்லிக் கொள்ளப்படுகிறது:— இந்தியாவில்மொகலாய சக்கிரவர்த்தியாய் இருந்த ஜிஹாங்கீர்க்கும் நூர்ஜிஹானுக்கும் விவாகமஹோற்சவம் நடந்தேறிய காலத்தில், பனிநீர் நிரப்பப்பட்டிருந்த ஓர் தொட்டியில் மிதந்த இத்தைலத்தை நூர்ஜிஹான் கண்டு தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்து முகர்ந்து அதன் மணத்திற்கு மெச்சித் தனது நாயகனது ஞாபகார்த்தமாக அதனை "ஜிஹாங்கீர் அத்தர்" என்ன, அதுமுதல் அப்பெயரே அதற்கு வழங்கலாயிற்றும் நிற்க.

உபயோகங்கள்:—அத்தரையும் பனிநீரையும் தவிர ரோஜாச் செடியினால் வேறு உபயோகங்களுமுண்டு. உரோமாபுரியைப்பற்றிய சரித்திரம் வாசித்துள்ளவர்கள், பூர்வீகரோமர்களுக்கு அம்மலர்மீது உள்ள பிரீதியை நன்கறிந்திருப்பர். அவ்வூரார்க்குச் சுற்றிலும் நறு மணங்கமழ்ந்து வீச, உணவு அருந்துவதில் மிகப்பிரியமாம். ஆதலின் அவர்கள் ரோஜா இலைகளையும் மலர்களையும் பரப்பி அவைகளின்மேல் உண்கலம் வைத்து ஆகாராதிகளைப் பரிமாறிப்பின்பு உண்பார்களாம் விருந்துக்காலத்தில் அவர்கள் வருஷிப்பது இம்மலர் மாரியே. உரோமாபுரியில் அரசுசெலுத்திய ஒருவன் ஓர் சுபநாளில் நடத்திய பிரபல விருந்தொன்றில் ஓயாது இப்புஷ்பமாரி வருஷிக்கப்பட்டதால் சிலர் இடம் பெயர்ந்து செல்லவும் இயலாமல் இறக்க நேர்ந்ததாம். ஏறக்குறைய 2000 வருஷங்களுக்குமுன் எகிப்தை

ஆண்ட கிளியோபாட்ரா என்னும் இராணி உரோமைப்பிரதம தள கர்த்தனாகிய அந்தோனியோ என்பவனுக்கு விருந்து செய்தபோது 2 முழ உயரத்திற்கு ரோஜா மலர்களைத் தரையிற் பரப்பி அவனை அதன் மீதிருத்தி உணவளித்தனளாம். ஐரோப்பாவில் தென்பாகத்தில் உள்ளவர்கள் பஞ்சுக்குப்பதிலாக ரோஜா இதழ்களைத்திணித்துத் தலையணை முதலியன செய்துகொண்டார்களெனத் தெரிகிறது.

(2) நம்மவர்களால் பனிநீர் விசேஷகாலங்களில் யாவர்மேலும் மரியாதைக்காகத் தெளிக்கப்படுகிறது. அக்காலங்களில் வாசனைக்காக அத்தரைச் சேர்ப்பதும், விருந்தினர்மேல் பூசுவதுமுண்டு.

(3) ரோஜா மொட்டோடு பிஞ்சுக்கடுக்காய் கொட்டைப்பாக்கு முதலியன சேர்த்து கஷாயம் இறக்கி பேதிமருந்தாக உட்கொள்ளுவார்கள்.

(4) குல்குந்து என்ற ஒருவகை இனிய லேகியத்தில் பெரும்பான்மையும் சேர்ந்திருப்பது ரோஜா இதழ்களே. இது குளிர்ச்சியும், ருசியும் கூடியதாய் மிக்க ஆரோக்கியத்தைத் தரத்தக்கது.

படிப்பினைகள்.—"நெல்லுக்கு உமியுண்டு, நீரிற்குநுரையுண்டு புல்லுக்குப் பூவிதழு முண்டு" என்ற தமிழ்ப்புலவர் கருத்துக்கியைய "முள்ளில்லாரோஜா இல்லை" என்ற ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. "எவ்வளவு சிலாக்கியமான பொருளுக்கும் ஏதாவது ஒருகுறை இருக்கவே இருக்கும்" என்பதே இதன் தாத்பரியம்.

இந்நறுமலர் எவ்வளவோ எழிலும் நேர்த்தியும் இயைந்து விளங்குவதாயினும் ஒருமணிப்பொழுதில் இதழ்வளம்குன்றி நிறம் மங்கி ஒரு பகலில் உலர்ந்துபோகும். ஆயினும் இப்பூவிற்கு இவ்வவனியிலுள்ள ஏனைஅரியபன்மலர்க்கும் இல்லா அருங்குணம் ஒன்று உண்டு: அஃதென்னவெனில், அதன் இதழ்கள் வாடி எழில் நிறம் எல்லாம் கெட்டுமாய்ந்த காலத்தும் அது இனிய நறுமணமே வீசும்என்பதே. இம்மலர் ஆராய்ச்சி மிக்குடைய அறிஞர்களுக்கு,

"இளமையும் மக்கள் தம்மின் எழிலும் இம்மலரைப் போன்று
வளமையும் வனப்பும் வாய்ந்தும் வரவர வாட்டம் கண்டு
தளர்வுறும். தளர்வுறுமல் தடுத்தவை ஓம்பல் வீணே;
மளமள எனச்செல் காலன் மாத்திரைப்போதில் மாய்க்கும

ஆதலின் இளமை தேசென்றுய இவ்விரண்டும பற்றித்
தீதுறு செருக்கே கொள்ளேல்; தேய்ந்தவை வாடிச்சாமால்.
ஓதுநம் கடன் நன் றுற்றி ஓங்குநற் புகழே எய்தின்
ஈதுரோ ஜாவைப் போல இறப்பினும் மணமே வீசும்."

என்ற சிறந்த உண்மையை அறிவுறுத்துவதோடு ஈசுவர சிருஷ்டியின் அற்புதத்தையும் காட்டுகிறது

பத்திராதிபர்.

* அக்பரின் காலக்ஷேபம்

நானுநிலைமைகளிலுமுள்ள பிரஜைகளின் க்ஷேமலாபமும் இன்பமும் அரசன் காலங்கழிக்கும் விதத்தைப் பொறுத்துள்ளவை. இஃது யாவருமறிந்த விஷயமே. அக்பர் சக்கரவர்த்தியும் பிரஜைகளைத் தம் வயமீர்க்கி அவர்களுடைய அன்பையெல்லாம் கொள்ளைகொள்ள ஸதா முயன்றுகொண்டே யிருப்பார். யாவரையும் ரஞ்சிக்க (சந்தோஷங்கொள்ள)ச் செய்பவன் என்பதே ராஜா என்னும் பதத்தின் பொருளாகும். † பிரஜைகளின் மனத்தைக் கவர்ந்து அவர்களது மனமெல்லாம் உருகிக் கரைந்து தன் மனமோடு ஒன்றுசேரும்படி செய்யும் வசீகர சக்தியுடையவனே ராஜா. இவற்றிற் கிணங்கவே நமது அக்பர் சக்கரவர்த்தியும் நடக்கலாயினர். ஓயாக்கவலையுடனிருந்தாலும் இராஜாங்க சம்பந்தமாய் நானுவித வேலைகளிருந்தாலும் சற்றேனும் மனஅமைதியைக் கைவிடமாட்டார். சதா சர்வகாலமும் சந்தோஷத்துடனேயே யிருப்பார். மேலும் ஈசுவரனுக்குத் திருப்தியும் பிரியமாகவும் எந்தெந்தத் தொழிகள் புரியவேண்டுமோ அவைகளைச் செய்வதில் இடையரு ஊக்கத்துடனிருப்பார். யோகத்திலும், தியானத்திலும் சிந்தையை ஆழ்த்துவர். ஞானநெறியடைய மிக்க தீவிரமுள்ளவராதலால் பிறரிடம் ஞானமார்க்கத்தைக் கேட்டுத்தெரிந்துகொள்வார். தான் மஹா நுண்ணறிவுடையவராயிருந்தாலும் அதை வெளிக்காட்டுவதேயில்லை. பெரியோர்முதல் தாழ்ந்தவர் வரை எதைச்சொன்னலும் கவனமாய்க் கேட்டுக்கொள்வார். ஒவ்வொருவரிடமிருந்தும நல் விஷயத்தை தெரிந்தெடுத்து கொள்வார். அவருடைய கொள்கையோவெனில் "சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறிநெறிகாண்பர்" என்பதே. இப்படி நெடுங்காலம் நடந்துவந்தும் அவருக்குப் புதிதாய்க் கற்றுத் தெரியவேண்டுவது ஒன்றுமில்லை. அவருக்குச்சமானமாக தெரிந்தவர்களும் கிடையாது. ஒவ்வொரு விஷயத்திலும் மேல்போனவர். கரைகடந்தவர். ராஜ்ய தந்திர நிபுணர்களெல்லாம் சக்கரவர்த்தி அரசுபுரியும் விதத்தைக்கண்டு "எதப்பா! இவருடைய புத்திக்கு நம்மறிவு

* இது 'அபுல் பாசில்' எழுதிய 'அயின் அக்பரி' யிலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

† c.f 'A king is he who melts all other's wills into his own'--*Carlyle*.

எவ்வளவுதூரம்! சூரியனுக்கு முன் மின்மினிபோலிருக்கிறது" என்று ஆச்சரியப்பட்டு சிங்காதனத்திற்கு சிரோரத்தினமாய் விளங்கும் இவரிடம் ராஜ்ய தந்திரங்களை கற்றுக்கொள்வார்கள். தாம் மிகவும் தெரிந்தவரென்ற அஹம்பாவம் எப்போதும் அவர்கொண்டவரல்லர். தாம் கேட்டறிய வேண்டியவைகள் நிரம்ப இருக்கின்றன என்றே எண்ணி ஒவ்வொருவரிடத்திலும் கேட்டுக்கற்க முயலுவார். தன்னிகரில்லா ராஜ ராஜேச்வரனாக இருந்தும் தம்மிடம் சமஸ்த ஐசுவரியங்களுமிருந்தும் அவர் ஒருக்காலும் தம்மை மறப்பதில்லை. கோபக்குறியென்பதே அவரிடம் தோன்றாது. வெகு உல்லாசத்துடன் தான் இருப்பார். ராஜப்பிரபுக்கள், தங்களுக்கு நித்திரைவரும்படிக்கு கதாசாகரர்களைக் கூப்பிட்டு கதைகள் சொல்லச்சொல்லி கேட்பது சகஜமென்பது பொதுவாய் தெரிந்தவிஷயமல்லவா? ஆனால் நமது சக்கரவர்த்தியோ அப்படிப்பட்டவரல்லர். தமக்கு நித்திரை வராமலிருக்கும் பொருட்டு விநோதக் கதைகள் சொல்லச் சொல்லி கேட்பார். நன்னெறிவழுவாது நடப்பதில் கண்ணும் கருத்துமுடையவர். ஆகையால் அகமும் புறமும் தூய்மையுற வேண்டிய கிரியைகளைச் செய்துகொண்டு தியானத்திலிருப்பார். புறச்சுத்த சம்பந்தமாய்ப் பாடுபடுவதில் மிகப் பிரயோஜனமில்லையென்று அறிந்தவராயிருந்தும, அகச் சுத்தியில் விசுவாச நம்பிக்கை உள்ளவர்கள் மனங்கோணுவண்ணம் தாமும் அவைகளை அனுஷ்டித்தே காட்டுவார். அவர் வாழ்நாட்களெல்லாம் நன்னெறிப் பயிற்சியிலும் அவைகளை அனுஷ்டித்து நடப்பதிலுமே கழிந்தன. சமஸ்த பெரியோர்களும் இதையறிவார்கள். ஈசுவரனுக்கும் தெரியும்.

சக்கரவர்த்தி எச்சாதியாரையும், எம்மதத்தையும் தூஷிப்பதே கிடையாது; நகைத்துப் பரிகாசம் செய்வதும் கிடையாது. அவர் தம் காலத்தை விருதாவாகக் கழித்ததே இல்லை. தம்முடைய கடமையைச் சரிவரச் செய்வதில் கருத்தும் கவலையுமாக இருந்து செய்து முடிப்பார். அவருடைய சன்மார்க்க ஒழுக்கங்களின் விசேஷப்பயனால் அவர்செய்யும் ஒவ்வொரு கிரியைகளும் ஈசுவரார்ப்பணமென்றே அறிதல்வேண்டும். சதா ஈசுவர ஸ்தோத்திரம் செய்வார். தம்முடைய சொந்த நடபடிக்கைகள், செய்த காரியங்கள், எண்ணிய எண்ணங்கள் முதலியன சரியா, தவறா என்று தனக்குள்ளேயே சிந்

த்துப் பார்ப்பார். இப்படிச்சிந்திக்க நான்குவேளைகள் ஏற்படுத்தியுள்ளார். முதலாவது அதிகாலையில் சூரியன் கிரணங்களை வீசுவதற்குமுன் கிழக்குவெளுத்திருக்குங்காலம். 2-வது-சூரியன் ஜொலித்துப் பிரகாசித்து தலை உச்சிக்கு வரும் தருணம். 3-வது—சூரியன் படிகடலிற் பாயப்போகும் அந்திவேளை. 4-வது இரவு நடுச்சாமமான 12மணி வேளை. இதெல்லாம் ஈசுவரார்ப் பணமாகவே செய்வார். மூடர்களும் அறிவினர்களும் இந்த ரஹசியங்களை உணராமலிருந்தால் யாரென்ன செய்யலாம்? நம்மைப்படைத்து ரக்ஷிக்கும் கருணைசாகரமான பகவானைக் கொண்டாடிப் புகழவேண்டுவது அத்யாவசியமென்று தெரியாதாருமுளரோ? சர்வவல்லமையும், சர்வவியாபகத்துவமும், ஸாவகாருண்யமும், சர்வக்ஞமும் உள்ள சக்கிரவர்த்திகளுக்குச் சக்கிரவர்த்தியாயுள்ள சர்வேசுரனுடைய ஒரு அற்ப அம்சம் தன்னிடமிருந்து விளங்குவதால் அரசுசெலுத்தி வருகிறோமென்று அறிந்து புவிமன்னர்கள் ஈசுவரனை நன்காராதிக்கவேண்டுவது மிகவும் அவசியமல்லவா?. நம் சக்கிரவர்த்தி இதை நன்கறிந்தவராதலால் தன்கடமையை ஒழுங்காகச்செலுத்தி ஆராதனைசெய்து வந்தார். அவருக்கு அக்நியிடத்தில் பக்தியுண்டு. தீபங்களையெல்லாம் ஆராதிப்பார். சர்வஜோதிக் கெல்லாமிருப்பிடமாகிய பகவானின் ஒரு நுண்ணிய அம்சமாக அக்நியையும் தீபங்களையும் கருதுவார். தம் பிரஜைகளின் க்ஷேமத்தையும் சந்தோஷத்தையும் கருதும் அவர்க்கு பெருங்குற்றவாளிகளுக்குக்கூட மரணதண்டனைவிதிக்க மனங்கூசும்.

அவர் மாம்ஸ போஜனத்தைப் பெரும்பாலும் ஒழிப்பர். வெகு மாதங்கள் இறைச்சியைக் கையால் தொடாமலும் கண்ணால் கூடப் பாராமலும் இருப்பார். அவருக்கு சிற்றின்பங்களிலும் ஸ்திரீ லோலனத்திலும் விசேஷித்த பிரிய மில்லை. ஒரு தினமாகிய 24 மணி நேரத்துக்கு ஒரு வேளைதான் உண்டி கொள்வார்.

அனேகமாய் இராப்பக லெல்லாம் ராச்சிய காரியங்கள் செய்வதிலும் பகவத் தியானத்திலுமே போக்குவார். நித்திரை செய்யும் காலம் வெகு அற்பம். மாலை வேளையில் சில நேரமும், காலைவேளையில் சிறிது நேரமும் சயனித்து இளைப்பாறுவார். இராவேளையில் அனேக நேரம் வேலையாகவே யிருப்பார். தான் ஏகாந்தமாய் வீற்றிருக்கும் அரண்மனை மண்டபத்திற்கு இராக்காலத்தில் தத்துவசாஸ்திர பண்டிதர்களான முதியோர்களும், மகமதிய மகான்

ன்களாகிய பேரறிவுள்ள சூபி [Sufis] களும் சக்கிரவர்த்தியினிடம் யாதொரு கட்டுக் காவல் தடையின்றி வருவார்கள். வந்தவர்களுக்கு மரியாதை செய்து ஆசனங்களிலிருத்தி சத்சம்பாஷணையில் காலங்கழிப்பர். பெரியோர்கள் சொல்வதை யெல்லாம் செல்வனே கேட்டு ஆழ்ந்து அறிந்து பழையமார்க்கங்களைத் தெளிவுற ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்து ஏதாவது அம்மார்க்க அனுஷ்டானங்களைச் சீர்ப்படுத்தித் திருத்தவேண்டிய அவசியமிருப்பது கண்டால் அவ்வண்ணம் அவைகளை ஒழுங்கு படுத்தச் சட்ட திட்டங்கள் ஏற்படுத்துவார். அவைகளால் பழைய அனுஷ்டானங்களைத் தீர விசாரியாமல் முரட்டுப் பிடியாக இருந்து வந்த வயதின் முதியோர்கள் ஞாயத்தை அறிந்து பழையனவைகளை விட்டுவிட்டு மேலானதாயுள்ள நூதன அனுஷ்டானத்தை அனுசரித்து சந்தோஷமடைவாராயினர். வாலிபர்களும் பிரகிருதத்தில் தங்கள் புத்திக்கு ஒத்திருக்கிறதென்று நூதன சம்பிரதாய சட்ட திட்டங்களை யறிந்து அதன்படி ஒழுகி நன்னெறி பயில்வாராயினர். சக்கிரவர்த்தி சபைக்குச் சரித்திரம் முதலியவைகளில் தேர்ச்சியடைந்தவர்கள் வந்து கூடி முன் நிகழ்ந்தவைகளை யெல்லாம் கூட்டாமலும் குறைக்காமலும் நடந்தவை நடந்தபடி உண்மையாய் எடுத்துப் பேசுவார்கள். இராக்காலத்தில் ராச்சிய காரியங்கள் நடபடிக்கைகள் இவைகளை விசாரித்துக் கேட்டு ஒவ்வொரு இலாகாவிலும் என்ன என்ன உத்திரவு பிறப்பிக்க வேண்டுமோ அவைகளை யெல்லாம் பிறப்பிப்பார். விடிவதற்கு ஒரு ஜாமம் அல்லது மூன்றுமணி நேரத்திற்கு முந்தி சகல தேசத்திலிருந்தும் மகா ஸங்கீத ப்ரவீணர்கள் தங்கள் வாத்தியங்களான வீணை, சாரங்கி, சித்தார், சுவரபத்து, யாழ், கின்னரி, பிடில் முதலானவைகளோடும் வந்து கூடி அருமையாய்ப் பாடி வாசிப்பார்கள். இப்படியாக $4\frac{1}{2}$ மணிவரை கழியும். அப்பால் வித்வான்களுக்கு மரியாதை செய்து விடையளித்து விட்டு $4\frac{1}{2}$ மணி முதல் மௌனமாய்க் கண்களை மூடிக்கொண்டு ஏகாந்தமாய்த் தியானத்திலிருந்து விடுவார். உடனே கிழக்கு வெளுத்து சூரியன் கிளம்பப் போகும் தறுவாயில் நானாவித அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள், ஜனங்கள், ராஜத்துவாரத்தில் தயாராய்க் காத்திருப்பார்கள். சூரியன் கிளம்பினவுடன் எல்லாரும் கூர்னீஷ் [Koornish] என்ற தொழுகையால் சக்கிரவர்த்தியை வணங்க ஆரம்பிப்பார்கள். தொழுகை முடிந்தவுடன் கூட்டம் கலையும். உடனே பத்னிமார்களும் மங்கள விலாஸத்திலுள்ள சக்கிரவர்த்தியின் காதலிகளும் சக்ரவர்த்திக்குத் தெண்டம் ஸமர்ப்பிக்க வருவார்கள். அப்போது ஒவ்வொருவருடைய யோக க்ஷேமலாப முதலியவைகளை விசாரித்து விட்டு சில்லரை வேலைகளையும் முடித்துக்கொண்டு சிறிதுநேரம் இளைப்பாற வேண்டி சக்கரவர்த்தி சயனித்துக் கொள்வார். (இன்னும் வரும்)

ம. ஜகதீசையர்.

கூடா" தென எவ்விடத்திலாவது விதி ஏற்படுத்தி யிருந்தாலு மிருக்கலாம். இதனுற் குற்றமென்னே?

ஆனுல், "சிந்துநதிக் கப்புறமிருக்கும் அந்நியதேசங்கட்கு இந்துக்கள் போகக்கூடாது" என்று விதி ஏற்படுத்தப்பட்ட காலத்துக்கும், அவ்விதியை மாற்ற வேண்டுமென்று கூறும் இக்காலத்துக்கும் அநேக வித்யாசங்களுண்டு.: இந்தியாவில் இப்போதிருக்கும்படியான ஜனத்திரள் அப்போதில்லை. நாடு நகரங்க ளெங்குஞ் செழித்தோங்கி இருந்தமையால், அந்நிய தேசங்கட்குச் செல்லவேண்டிய ஆவசியகம் அவர்களுக்குச் சிறிதும் நேரிடவில்லை. அன்றியும் ஆரிய வர்த்தத்திலுள்ள ஜனங்கள் எப்போதும் ஆசாரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள். உயிர் போனுலும் ஒழுக்கங் குன்ருது நடக்கும் உத்தமர்கள். என்ன துன்பம் நேர்ந்த போதிலும் அதனை யடக்கிக் கொண்டு எக்காலமும் ஈசுவரத்தியானமே ஆறுதலென்று கருதியிருப்பவர்கள். இக்காரணங்கள் பற்றி பூர்வத்தில் ஆரிய வர்த்தத்தில் வசித்துவந்த காருண்யசிரோமணிகள் சிந்து நதிக் கப்பாலுள்ள மிலேச்ச தேசங்களுக்குப் போகக்கூடாதென்கிற கட்டுப்பாடுசெய்துகொண்டார்கள் போலும். இவ்விதமான கட்டுப்பாடு இதுகாறும் நடந்து வந்தது.

ஆனுல் இனிமேல் இவ்விதமான கட்டுப்பாடு நீடித்து நடந்து வருமென்கிற மனவுறுதி யாவர்க்குங் கிடையாது.: ஏனெனில், அந்நிய தேசத்தவர்கள் நாளுக்கு நாள் மிலேச்சத் தனத்திற் குறைந்து சீரடைந்து வருகிருர்களென்பதும் வாஸ்தவமே. இவ்வாறு ஜீவஹிம்சை முதலிய இழிய செய்கைகள் நாளா வர்த்தியில் அந்நிய தேசத்தவர்களிடத்தினின்றும் நீங்கி எங்கும் ஜீவகாருண்யம் மிகும் என்கிற நம்பிக்கை ஒவ்வொருவருடைய மனதிலும் தோன்றி இருக்கின்றமையால், இனி அந்நியதேசங்கட்குச் செல்லக் கூடாதென்கிற கட்டுப்பாடு நில்லாது.

ஆயினும் அவ்வாறு யாத்திரை செய்ய விரும்புகிறவர்கள் ஒரு விஷயத்தில் மாத்திரம் கட்டுப்பாடு செய்து கொள்ளுதல் மிக்க நலமெனத் தோற்றுகின்றது. அதாவது தமது சிறந்த ஆசாரவொழுக்கங்களைக் கைவிடாதிருப்பதில் தான். தகுந்த வைதீகப்

பிராமணர்கள் தங்களுக்கு ஆசாரமே சிறந்த தென்றெண்ணி உயிர்போனாலும் தங்கள் ஜாதியாசாரங்களைக் கைவிடமாட்டார்கள். இங்கிலீஷ் கற்றவர்களோ அப்படியன்று. எது போன போதிலும் அந்நிய தேசங்கட்கு யாத்திரை செய்ய வேண்டுமென்றே துணியக்கூடும். இவர்கள் தங்கள் ஜாதி சமயக் கொள்கைகளைக் கைவிடாதிருத்தல் மிக்க மேன்மையாம். ஒரு வேளை ஜாதி சமயக் கொள்கைகளை இழக்கும்படியான அவசியம் நேர்ந்தபோதிலும், ஆட்டுக் கொலை, மாட்டுக்கொலை, மதுபானம், மாமிச போஜனம் முதலான கெட்ட செய்கைகளையாகிலும் செய்யாதிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம். ஆனால் "காலத்திற்கேற்ற கோலம்" என்று சொல்லுவது போல், சில விஷயங்களில் காலத்தை யனுசரித்து நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டியதும் அவசியமே. அந்நிய தேசங்கட்கு யாத்திரை செய்வதனாலாய பயன் அனந்த முள வென்பதை நாம் மேலே குறிப்பிட்டிருக்கிறோம். கடல் யாத்திரை செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் தங்கள் சொந்த ஆவசியகத்தின் பொருட்டுத் தனியாக கப்பல்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஐரோப்பியர்களுடைய கப்பல்களில் நாம் யாத்திரை செய்வோமானால், மதாசாரங்களுக்கு எப்படியாகிலும் ஈனம் சம்பவிக்கும். மேலும், நம்மவர்கள் போய்த் தங்குமிடங்களில் இந்துக்களுக்கென்றே பிரத்தியேகமாக சத்திரம் சாலை முதலியன ஏற்படுத்துதலும் நலமாம். ஆகைபால் ஆரியமகஸ்தர்கள் தங்களுக்கிருக்கும் கௌரவங்களையும், அந்தஸ்துகளையும், மற்ற நற்குண நற்செய்கைகளையும், இங்கிலீஷ் படிப்பதினாலே கைவிட்டு விடாமல் அவற்றை எப்போதும் காப்பாற்றி வருவார்களாக.

சி. கு. நாராயணசாமி முதலியார்.
கோவை.

அபிதான விளக்கம்.

[கக௦-ம் பக்கத்தொடர்ச்சி.]

அம்சுமான்.

சூரியவம்சத்தரசனான ஸகரனுடைய பௌத்திரன். அஸமஞ்சன் புத்திரன். பகீரதனுடைய பிதாமகன். ஸகரன் ஆரம்பித்த அசுவமேதயாகக் குதிரையை இவன் தேடிச்சென்று கடைசியாய்ப் பாதாள லோகத்தில் கபிலமகரிஷியண்டை மேய்ந்துகொண்டிருப்பதையும் பக்கத்தில் தனது சிறியதகப்பன்மார் அறுபதினாயிரம் பேர்சாம்பலாய் நீருக்கிடப்பதையும்கண்டு, கருடன் மூலமாய் அவர் கங்காஜலத்தால் மட்டும் கரையேறுவார்களென் றறிந்து மனவருத்தத்துடன் குதிரையைமாத்திரம் பிடித்துவந்து ஸகரர் யாகத்தை நிறைவேற்றி வைத்துவிட்டுக் கருடன் சொன்ன வார்த்தையையும் தெரிவித்தான்.

அஸ்தீகர்.

ஜரத்காரு மகரிஷிக்கும் வாசுகியின் சகோதரியாராகிய ஜரத்காரி என்ற நாககன்னிகைக்கும் புதல்வர். ஜனமேஜயர் செய்த சர்ப்பயாகத்தில் உலகிலுள்ள சர்ப்பங்களெல்லாம் அக்கிகுண்டத்தில் வீழ்ந்திறக்க, தக்ஷகன் மாத்திரம் இந்திரன் கட்டில்காலைச் சுற்றிக்கொண்டான். உடனே அக்கட்டிலுடன் தக்ஷகன் அக்கிகுண்டத்துக்கு வந்துசேரும்படி மந்திர உச்சாடனம் செய்கையில் அஸ்தீகர் வந்துசேர்ந்து ஸமாதானம்செய்து தக்ஷகனை விடுவித்து அதற்குப்பிரதியுபகாரமாகத் தன்னை நினைப்பவர்களுக்கு ஸர்ப்ப பய மேற்படக்கூடாதென்று தக்ஷகனிடமிருந்து வரம்பெற்றுக்கொண்டார்.

அமரஸிம்மன்.

விக்கிரமாதித்யன் ஸதஸில் நவகவிரத்னங்களில் ஒருவராய் விளங்கினவர். இவர் அமரகோசம் என்னும் ஸம்ஸ்கிருதப்பொருளகராதியொன்றை சுலோகபூர்வமாயியற்றியிருக்கின்றார். இவர்காலம் விக்ரமாதித்யன் காலமாகிய கி. மு. முதல் நூற்றாண்டு.

அஸமஞ்சன்.

சூரியகுலத்தரசனான ஸகரமகாராஜனுக்கு முதல் மனைவியாகிய கேசினிக்குப் பிறந்தவன். இவன் மந்தபுத்தியும் துஷ்ட ஸ்வபாவமுமுடையவன். குழந்தைகளைக்குளத்தில் எறிந்து அது கஷ்டப்படுவ

தைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பான். இவனை நகரினின்றும் துரத்திவிட்டார்கள். இவன் புதல்வன் அம்சுமான் பட்டத்துக்கு வந்தான். "அசமஞ்சன்" என்பது தற்காலத்தில் மந்தபுத்தியுள்ளவனைக்குறிக்கும் மொழியாகிவிட்டது.

அஸுரர்.

கசியப்பிரஜாபதிக்கு திதி அதிதி யென்று இரண்டு மனைவிகள். திதியின் புதல்வர்கள் தைத்யர்கள் (அஸுரர்கள்) அதிதியின் புதல்வர்கள் தேவர்கள். இவர்களுக்கு பிறவிமுதல் இயற்கையாய் தாயாதி விரோதமானது ஏற்பட்டது. சுரரின் குரு சுக்ராசாரியார். தேவர்களின் குரு பிருஹஸ்பதி. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அநேக யுத்தங்கள் நடந்ததாகவும் மகாவிஷ்ணு இந்திரன் முதலானவர்கள் தேவர்கள் பக்கம் சேர்ந்து அசுரர்களை ஜயித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக்கடைந்து அமிர்தம் உண்டுபண்ண அதைப்பிரிக்கும் விஷயத்தில் கலகம் ஏற்பட மகாவிஷ்ணு மோகினியவதாரம் எடுத்து அமுதத்தைத்தேவர்களுக்குமாத்திரம் பிரித்துக்கொடுத்துவிட்டு அசுரர்களை ஏமாற்றி விட்டார். இதனால் அஸ்ரர்களுக்கு ஸுரம் (அமிர்தம்) சாப்பிடாதவர்களென்றும் தேவர்களுக்கு ஸுரர் (அமிர்தம்) உண்டவர்களென்றும் பெயர்.

[பார்ஸி வேதமாகிய அவஸ்தாவில் அஸுரர் என்பதற்குச் சரியான அஹுரர் என்பது நல்ல அர்த்தத்தில் தேவர்களென்று பொருள் படுமாறு உபயோகிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் முன்னோரும் இந்து ஆரியர்களின் முன்னோரும் ஒரு காலத்தில் ஒரே இடத்தில் வசித்திருக்க வேண்டுமென்றும் வரவர யக்ஞாதிகளிலும் ஸோமபானம் முதலியவைகளிலும் இருவர்களின் மதமும் வேறுபட்டதால் அவர்களும் பிரிந்து கொடிய விரோதிகளானார்கள் என்றும் அதைத்தான் தேவாசுரயுத்தங்களென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும் பூர்வ நூலாசிரியர்கள் கூறுகின்றார்கள்.]

இப்பொழுது இந்துமதம் சம்பந்தப்பட்டமட்டில் கெட்டவிஷயங்களையும் கெட்டவர்களையும் அசுராம்சமென்றும் நல்ல விஷயத்தையும் நல்லோரையும் தேவாம்சமென்றும் வழங்கிவருகின்றார்கள்.

R. S. நாராயணஸ்வாமி அய்யர் B. A. B. L.

பர்த்ருஹரி நீதிசதகம்.

6-வது நல்லோர்படலம்.

[240-ம் பக்கத் தொடர்ச்சி.]

52. நல்லோருடன் ஸகவாசஞ் செய்ய ஆசை, பிறர்குணங்களைப்புகழ்வதில் திருப்தி, பெரியோரிடத்தில் வணக்கம், கல்வியில் ஊக்கம், தன் மனையாளிடத்தில் காதல், உலக அபவாதத்திற்குப்பயம், பரமசிவனிடத்தில் பக்தி, தன்னையடக்கத்திறமை, மூர்க்கரோடிணங்காமை,—இப்படிப்பட்ட உத்தமகுணங்கள் எவர்களிடத்துள்ளனவோ, அப்படிப்பட்ட மகான்களுக்கு வந்தனம்.

53. கஷ்டகாலத்தில் தைரியம், உயர்வுகாலத்தில் பொறுமை, சபைமுன்னில் பேசுந்திறமை, போரில் பராக்ரமம், கீர்த்தியில் ஆசை, வேதம் ஓதுவதில் ஊக்கம்,—இவையெல்லாம் மஹான்களுக்கு இயற்கையாயமைந்துள்ளன.

54. கைக்கழகு நன்கொடை, தலைக்கழகு பெரியோர் பாதஸேவை, முகத்துக்கழகு உண்மையான சொல், புஜங்களுக்கழகு ஜயமும் ஒப்பற்ற பராக்ரமமும், மனதுக்கழகு நல்லொழுக்கம், செவிக்கழகு நல்லசாஸ்திரங்களைக்கேட்டல். செல்வமற்றவராயினும் இயற்கையாகவே மகான்களாயிருப்போர்க்கு இவைகளேயழகு.

55. உயிர்க்கொலை செய்யாமை, பிறர்பொருளைத் திருடாதொழிதல், உண்மையான சொல், தகுந்தசமயத்தில் தன் சக்திக்குத் தக்கபடி தானம், பிறர்மனைவிகளைப்பற்றிப் பேசாதிருத்தல், ஆசையெனும் வெள்ளத்தை யடக்கல், பெரியோரிடத்தில் வணக்கம், எல்லாப் பிராணிகளிடத்திலும் தயை,—இவையெல்லாம், யாதொரு வித்தியாசமுமின்றி எல்லாசாஸ்திரங்களுக்கும் பொதுவானவிதியாயிருக்கின்றன. மேன்மையடைய இவைகளே நல்லவழி.

56. மகான்களுடைய மனது, உயர்வுகாலத்தில் உத்பல மலர்போல் மிருதுவாயும், கஷ்டகாலத்தில் பெரும் மலைக்கல்போல் கடினமாயுமிருக்கும்.

57. பிறருக்குத் துன்பமின்றியும், நியாயவழி தவறாமலும், காலக்ஷேபஞ்செய்தல், உயிர்போவதாலுைம் தீங்குசெய்யா

மை, கெட்டவர்களைப் பேணுதிருத்தல், செல்வமுற்றவன் நண்பனுயி னும் அவனை யாசியாதிருத்தல், கஷ்டகாலத்தில் மிகுந்ததைரியம், மகான்களுடைய வழிநடத்தல்—இக்கடுமையான (கத்தி) விருதங்க ளெல்லாம், நல்லோர்க்கு யாரால் உபதேசிக்கப் பட்டனவோ?

58. மறைவாகக்(சொல்லிக்காட்டாமலே) கொடுத்தல், வீடுதேடி வந்தவர்களை யுபசரித்தல், பிறருக்குவேண்டியதைச் செய்துவிட்டு அதைவெளியே சொல்லிக்கொள்ளாதிருத்தல், பிறர் செய்த நன்மை யை யெல்லோர்க்கும் தெரிவித்தல், ஸம்பத்தைக்கொண்டு கர்வமடை யாமை, பிறர்களைப்பற்றி இகழாதிருத்தல்—இக்கடுமையான (கத்தி) விருதங்களெல்லாம், நல்லோர்க்கு யாரால்உபதேசிக்கப்பட்டனவோ?

59. இரும்பைக் காயவைத்து அதன்மேல் நீரைவார்த்தால், அது கொஞ்சமேனும் மிஞ்சுவதில்லை, அதேநீரை தாமரையிலையிலே தெளித்தால் அது முத்து வடிவ மடைகின்றது. அதே ஜலமானதுகட லுக்குள் உள்ள முத்துச்சிப்பிக்குள் விழுமானல், அது முத்தாகவே மாறிவிடுகின்றது.—இம்மாதிரிதான் முறையே கீழோர், நடுவினர், மேலோர் இவர்கள் சேர்க்கையாலுண்டாகும் பயன்களும்.

60. நன்னடக்கைகளால் தகப்பனைத் திருப்திசெய்பவனே புத்திரன், தன்கணவன் நன்மையையே விரும்புபவளே மனைவி, துன்பத்திலும் இன்பத்திலும் சமமாய் நடப்பவனே மித்திரன்— இம்மூன்றும், இவ்வுலகில் புண்யவான்களுக்குத்தான் அமைகின்றன.

61. வணக்கத்தால் உயர்வடைகின்றார்கள். பிறர் குணங்க ளைப் புகழ்வதால் தன் குணங்களை வெளிப்படுத்துகின்றார்கள். பிறர் நன்மையின்பொருட்டு வேண்டியமுயற்சி செய்வதாலேயே தங்கள் நன்மையையும அடைகின்றார்கள். கடுமொழிகளால் எப்பொழுதும் நிந்திக்கின்ற துஷ்டர்களை, தற்பொறுமையாலேயே அவமதிக்கின்ற ர்கள்—இப்படிப்பட்ட ஆச்சரியமான நன்னடக்கையுள்ள நல்லோர் களையுலகமெல்லாம் புகழ்கின்றது. இவர்களை எவன்தான் பூஜிக்க மாட்டான்?

7-வது பரோபகாரப்படலம்.

62. கனிகள் மிகுந்த மரங்களே (தலை) வணங்கு (வளை) கின்றன. புதுநீர் உண்ட (நிறைந்த) மேகங்களே (பூமிக்குச்)

சமீபத்தில் சஞ்சரிக்கின்றன ஐசுவரியவான்களாயினும் நல்லோர் கர்வமடையார்கள். பரோபகாரிகளுக்கு இவையெல்லாம் இயல்பல்லவா?

63. காதுக்கழகு (நல்லவிஷயங்களைக்) கேட்பதேயொழியக் குண்டலமன்று; கைக்கழகு தானமேயொழியக் கங்கணமன்று; கருணையே நிறைந்த சரீரம் பரோபகாரத்தாலேயே பிரகாசிக்கின்றது; சந்தனத்தாலன்று.

64. சூரியன் தாமரைக்குளத்தை மலரச் செய்கிறான். சந்திரன் கருநெய்தல் புஷ்பங்களை மலரச்செய்கிறான். கேட்காமலே மேகம் நீரைக் கொடுக்கின்றது. பிறருக்கு நன்மை செய்வதில் நல்லோர்கள் தாங்களே முயற்சியுடையவர்களாயிருக்கிறார்கள்.

65. தங்கள் நன்மையை (க்கூட) க்கருதாமல் பிறர் நன்மையையே செய்ய முயல்பவர் உத்தமபுருஷர்கள். தங்கள் நன்மைக்கு விரோதமின்றிப் பிறருக்கும் நன்மைசெய்ய முயல்பவர் ஸாமான்யமானவர்கள். தங்கள் நன்மையையே கருதி பிறர்நன்மையைக் கெடுப்போர், மனிதராக்ஷஸர்கள். ஆனால், யாதொரு பயனுமின்றி பிறர் நன்மையைக் கெடுப்போர் எப்படிப்பட்ட (என்ன பெயருடைய) வர்கள் என்று தெரியவில்லை.

(66) பாவச் செயல்களினின்று (நம்மைத்) தடுக்கின்றது, நன்மை செய்யும்படி தூண்டுகின்றது, மறைவாயிருக்கவேண்டியதை மறைத்துக் காப்பாற்றுகிறது; நற்குணங்களை வெளியிடுகின்றது, துன்பம்வந்தபொழுதும் கைவிடுவதில்லை, (தருந்த) சமயத்துக்குதவு (கொடுக்) கின்றது—இவையெல்லாம் நல்லோர் ஸகாயத்தின் லக்ஷணங்களென நல்லோர் கூறுகின்றார்கள்.

67. பாலானது, தன்னையடைந்த நீருக்குத் தனக்குள்ள குணங்களையெல்லாம் முதலில் (பிரித்துக்) கொடுக்கின்றது. நீரோ பாலுக்கு (நெருப்பினால்) ஏற்பட்ட தாபத்தைப்பார்த்து (மனஞ்சகியாமல்) தன்னையே நெருப்புக் கிரையாக்கிக்கொள்ளு (ஆவியாய்ப்போய் விடு)கின்றது. அப்பொழுது பாலானது தன்நண்பனை நீருக்கேற்றபடி ஆபத்தைப்பார்த்துத் தானும் நெருப்பில் (பொங்கி) வடிய முயல்கி

ன்றது. மறுபடி நீரைச் சேர்த்த (தெளித்த) மாத்திரத்தில்பால் (பொங்காமல்) அடங்கிவிடுகின்றது. நல்லோர்கள் சிநேகமும் இத் தன்மையானதுதான்.

68. இதோ ஸ்ரீமந் நாராயணன் சயனித்துக்கொண்டிருக்கிறார். இன்னொருபக்கத்தில் அவருடைய சத்துரு சைந்நியங்கள் மறைந்துகொண்டிருக்கின்றன. மற்றொரிடத்தில் தன்னையண்டினமலைகளெல்லாம் மறைந்துகொண்டிருக்கின்றன. வேறொரிடத்தில், பிரளயகாலவர்ஷங்களுடன்கூடிய முகாக்நிவாசஞ்செய்கின்றது. ஆ! ஆ!! இந்த சமுத்திரத்தின் சரீரம் எவ்வளவு பெரிது! எவ்வளவு வலிது! எவ்வளவுதான் தாங்கக்கூடியது!

66. இந்த விசாலமான பூமியைத் தன்முதுகில் தாங்குகின்ற ஆதிகூர்மம் எடுத்த ஜன்மமே ஜன்மம். நக்ஷத்திரமண்டல முழுமையும் தன்னைச்சுற்றிவரும்படி யமைக்கப்பட்டுள்ள துருவ (நக்ஷத்திரத்தி) னுடைய பிறவிதான் மேலானது. ஆகாசத்தில் (துருவனைப்போல்) ஆவது, பாதாளத்தில் (கூர்மத்தைப்போல்) ஆவது பரோபகாரஞ் செய்யக்கூடாத மற்றபிராணிகள், ப்ரஹ்மாண்டமென்ற உதும்பரப்பழத்துக்குளுள்ள கொசுகுகள் இறகுபடைத்தும் வீணாவதுபோல, எடுத்த ஜன்மம் பயனற்றவைகளாய் இருக்கின்றன.

70. ஆசையையொழி, பொறுமையடை, கர்வத்தை யடக்கு, பாபச்செயலில் மனதைச்செலுத்தாதே, உண்மையைச்சொல், நல்லோர்வழியில் நட, வித்வான்களை உபசரி, மரியாதைக்குத்தக்கவர்களை மரியாதைசெய், சத்துருக்களையும் நயந்துகொள், வணக்கத்தைத் தெரிவித்துக்கொள், கீர்த்தியைக் காப்பாற்று, துக்கமடைந்தவர்களிடம் தயைபாராட்டு.—இவையெல்லாம் நல்லோர்களின் நடத்தை.

71. மனோவாக்கு காயங்களில் புண்யமெனும் அமிருதம் நிறைந்தோரும், உபகாரங்களால் மூவுலகையும் திருப்திசெய்வோரும், பிறருடைய சிறிதளவு நற்குணத்தையும், (மலைபோல்) பெரிதாப் பாராட்டுவோரும், எப்பொழுதும் மலர்ந்த ஹிருதயத்துடன் கூடினவருமான நல்லோர்கள் எத்தனைபேர் இருக்கின்றார்கள்?

[இதை என்னுடைய உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது]

R. வேலது நாராயணசர்மா BA., BL.

ஸ்ரீ கிருஷ்ணசைதன்யாது திவ்ய சரித்திரம்.

(176-பக்கத்தொடர்ச்சி)

நாலு வயதுள்ள குழந்தையிடமிருந்துவந்த இவ்வாசகத்தைக் கேட்ட தாய், இக்குழந்தையின் விபரீத குணத்தை யுன்னித் திகிலடைந்து கணவனுக்குரைத்தாள். ஜகந்நாதரும் குழந்தையைப் பள்ளியில் உடனே வைக்காவிடில் இவ்விபரீதகுணம் அதிகரிக்குமென்றெண்ணி அவ்வாறே செய்யத் தீர்மானித்தார். இதைக் கேட்ட நிமை விடாமல் அழுததால், சசீதேவியும் "பிள்ளைபடியாமற் போயினும் போகிறது; அழாமல் இருந்தால்போதும்" என்றாள். இதனால் நிமை படியாமலே இருந்துவர இடமுண்டாயிற்று.

இவ்வாறிருக்கும் நாளில், ஒரு நாள் சசீதேவியின் முன்னோர் ஒருவர் இறந்த திதி (சிரார்த்தம்) வர அன்று ஸ்நான மந்திரமுதலியன நடந்தவுடன் வீட்டிலுள்ள பழைய ஓடு சட்டிகளை நிமையெடுத்து மடியாக வைக்கப்பட்ட பண்டங்களுடன் கலக்கி அன்னை மனதைத் துன்புறுத்த ஆரம்பித்தான். அன்னை வருத்தமுற நிமை, "அன்னையே, இவ்வுலகில் யாவரும் வெளி வேஷம்போடுவது தான வேலை என்றிருக்கிறார்கள். மனம் சுத்தமாயிருக்கவேண்டுமே தவிர பண்டங்கள் சுத்தம் அசுத்தமென்று சொல்வது புத்தியீனம்" என்றான்.

குழந்தைக்கு 5-ஆம் பிராயம் அணுகலும், ஓர் நாள் விடாமல் அழுவதைக்கண்ட பெற்றோர் "ஹரி" "ஹரி" என்ற நாமஞ்சொல்லியும் பயனற்றுப்போகவே, துக்கத்தில் மூழ்கினர். கொஞ்சநேரத்துக்கெல்லாம் குழந்தையின் அழுகை சிறிது ஓய்ந்ததைக் கண்டு "அருந்தவப்புதல்வ! உன் எண்ணம்யாது? என் இவ்வாறு எங்களை வருத்தத்துக் குட்படுத்துகின்றனை?" என்றுகேட்டார்கள். குழந்தை "இன்றையதினம் அடுத்தவீட்டுக்காரர்களான ஜகதீசரும் ஹிரண்யரும் தங்கள் ஸ்வாமிக்குச் செய்வதாய் ஒத்துக்கொண்ட ஏகாதசி விரதப்படி செய்யப்போகிற தின்பண்டங்களை எனக்கு முந்தியளிக்கச் சொல்வீர்களாயின் நான் துக்கம் நீங்குவேன்" எனச்சொல்லிற்று.

இதைக்கேட்ட பெற்றோர் "இதென்ன விபரீதம்! ஹிரண்யரும் ஜகதீசரும் விரதம் கொள்வதாவது! விருதம் அனுஷ்டித்திடலும் தின்பண்டங்களை பூஜைசெய்வதற்கு முன் இங்குக்கொண்டுவந்து கொடுப்பதாவது! ஏகாதசி திதியாவது! ஒன்றும் தெரியவில்லையே" என்று அயலார்கள் வீட்டிற்குப்போய் விசாரிக்க, இவ்வளவு முண்மையாக இருந்ததுமல்லாமல் அவர்களும் தின்பண்டங்களைக் குழந்தை நிமையிடம் கொடுக்க வந்தார்கள். அவர்களைக் கண்டு நிமை "என் தாய் ஸ்வாமியின் நிவேதனங்களை நான் அங்கீகரிக்க ஆட்சேபிக்கிறாள்போல் தோன்றுகிறது. நான் தான்ஸ்வாமி. என்னைத் தான் எல்லாரும் வணங்கவேண்டும்" என்றுசொன்ன வாசகத்தைக் கேட்டு உடனே, "குழந்தாய் நீர் தான் பாலகோபாலர். உமது மூலமாய் கோபாலர் இந்நிவேதனத்தை அங்கீகரிக்கட்டும்" என்று சொல்லி தின்பண்டங்களைக் கொடுத்தார்கள். (இதே ஹிரண்யரும் ஜகதீசரும் பின்னால் நிமையின் முக்கிய சிஷ்யர்களாவதைப் பின்னால் படிக்கப் போகிறோம்.) நிற்க.

ஸ்ரீஹட்டம்(ஸில்ஹெட்)என்ற ஊரிலிருந்து நவத்வீபத்துக்கு வந்து ஸ்ரீ கங்காதாஸரின் வியாகரண பாடசாலையில் சிறப்புடன் தேறிய முராரிகுப்தர் என்பவர் வைத்திய சாஸ்திரத்திலும் மிக்க தேர்ச்சியடைந்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவர். அவர்க்கு அச்சமயம் 20 வயது. ஆயினும் யோகவாசிஷ்டம் என்ற கிரந்தத்தை நன்குபடித்தவர். அவர் ஓர்நாள் யோகவாசிஷ்ட தத்துவத்தைக் குறித்துப் பல ஸ்நேகர்களுடன் பேசிக்கொண்டு தெருவழியாய் வருவதைக்கண்ட நிமை, ஏளனம்செய்து அவமதிக்க, முராரிகுப்தர் "இதென்ன! ஜகந்நாதரின் புத்திரன் உன்மத்தனோ?" என்ன, அதைக்கேட்ட நிமை, "உன்மத்தனென்பதை பிற்பாடு காண்பிக்கிறேன்" என்றான். பிறகு இதைக்கவனியாது வீட்டிற்குச் சென்றார். அன்று குப்தா சாப்பிடுங்காலத்தில் நிமை அவரையணுகி ஹே முராரி! நாத்திகம் பேசுதலை ஒழி. ஸ்ரீஹரியை நன்குதொழுக. *பசு!

---

* அத்வைதத்தை அழித்து த்வைத மதத்தை ஸ்தாபிக்கத்தான் ஸ்ரீ கௌராங்கர் அவதரித்தார் என்று நினைப்பது தவறு. கிறிஸ்தவர்களிற் பலரைப்போல் பிறமதகண்டனஞ் செய்தால் தம் மதத்தின் கௌரவம் வெளியாகுமென்ற எண்ணத்தை ஸ்ரீ கௌராங்கர் முதலிய அவதார புருஷரிடத்திலும் ஏற்றிக் கூறுவது மடமையே.

வும் பதியும் ஒன்றென வெண்ணும் அகத்தையகற்று." என்று சொல்லி மின்னலினும் அதிவிரைவுடன் மறைந்தான். முராரி பார்த்தார்; ஐந்துவயதுள்ள குழந்தையினின்றும் வந்த வார்த்தையை சிந்தித்தார். மெய்மறந்தார். மயிர்சிலிர்த்தார். நிமை அசாதாரணமான அவதார புருஷரெனத் தீர்மானித்தார். அக்குழந்தை பாலகோபாலரென்றே எண்ணினார். ஜகநாத மிச்ரர் வீட்டிற் கேகினார். குழந்தை நிமையைநோக்கினார். அதன் அடிமிசை வீழ்ந்தார். ஜகந்நாத மிச்ரரும் இதென்னவென்னத் திகைத்தார். அப்போது முராரி கூறியதாவது "மிச்ர!, உமது புதல்வர் யாரென்று உமக்குத் தெரியவில்லைபோலும். அவர் செய்வதெல்லாம் பாலகிருஷ்ணரின் லீலையே. சிறிதுநாளில் அவர் பெருமையை நீரும் அறிவீர். 'வாலறிவன் நற்றாள் தொழும்!' வகையை எனக்குக் காட்டிய பெரியவர் இவர்தான்." என்று கூறி நிமையைச் சிலாகித்துத் தொழுது சென்றனர்.

இவ்வாறு குழந்தை 5 வயதிலேயே தன் பெருமையைக் காட்டிக்கண்டோர் மனங்களிக்கச் செய்து துவைதமார்க்கத்தைத் தெரிவிக்க ஆரம்பித்தது. (இன்னும் வரும்)

கி. ஜகதீசையர் **B. A.**

ஹ ரி வ ம் ச ம்.

(அத்தியாயம். 89)

ஜராஸந்தன் மதுராபுரியை எதிர்க்க ஆயத்தப்படுதல்.

இவ்விதமாகச் சிலகாட்கழிந்தபின் ராஜகிருகமென்ற மாநகருக்கு மன்னனான ஜாரஸந்தன் என்பவன் ஸ்ரீ கண்ணபிரானால் கம்ஸன் வதைக்கப்பட்டதைத் தன் இரண்டு குமாரிகள் மூலமா யறிந்துகொண்டான் கம்ஸன் ஜராசந்தனுக்கு மருமகன். ஆகையால் தன் மருமகன் இறந்ததைக் கேள்வியுற்ற ஜராசந்தன், யதுகுலத்தவர்களை வதைத்து நாசம்செய்வது தன் கடமையெனநினைத்துத் தன் சைனியத்தை ஆறு அணிகளாக வகுத்து அவற்றை நடாத்திக்கொண்டு மதுராபுரியை நோக்கிப் புறப்பட்டான். மகத தேசாதிபதியாகிய ஜராசந்தன், பருஹத்ரதன் என்ற வேந்தன் புத்திரன். ஜராசந்தனு

க்கு அஸ்தி, பிராப்தி என்ற நாமதேயத்துடன் கூடிய அழகிய யுவ திகளான இரண்டு புத்திரிகளிருந்தார்கள். ஜராஸந்தன் அவ்விரண்டு புத்திரிகளையும் கம்ஸனுக்கு விவாகம் செய்துகொடுத்தான். இந்த ஸூரசேனனென்ற கம்ஸன் தனது தகப்பனுகிய உக்கிரசேன மகா ராஜனைச் சிறையில்வைத்து ஜராஸந்தனுடையஉதவிகொண்டு யாதவ ர்களை அலக்ஷியம்செய்து, தான் ராஜ்யாதிபத்தியத்தை யடைந்தவன். ஸ்ரீ கண்ணபிரான் தன்னுடைய உறவினர்களுக்குச் செய்யவேண் டிய கடமைகளை யெண்ணியும், அவர்களுடைய கருத்தை நிறைவே ற்றிவைக்கும் நிமித்தமாயும், வசுதேவரானவர் உக்கிரசேன மகாரா ஜாவின் க்ஷேமத்தில் சதாகருத்துஉடையவராயிருந்ததாலும், துராத் மாவாகிய கம்ஸனைமாய்க்கவே, உக்கிரசேனன் போஜர்களுக்கும், விரு ஷ்ணிகளுக்கும் அந்தகர்களுக்கும் அரசனுனன். கம்ஸனுடையபத் தினிகளாகிய அஸ்தி பிராப்தி யென்பவர்கள் ஜராசந்தனுடைய செல்வப் புதல்விகளாகையால் ஜராசந்தன் குமாரிகளால் தூண்டப்ப ட்டு அவர்கள் நிமித்தமாய் கண்ணனைப்பழிவாங்கவெண்ணிக்கோபத் தால் அக்கினிபோல் ஜொலித்துக்கொண்டு தன் துணையரசர்களுடன் மதுராபுரியைநோக்கிப் புறப்பட்டான். கருஷதேசத்தரசனுகிய தந்த வக்ரனும், சேதிமன்னனும், கலிங்கமன்னனும், மகாபராக்கிரமசாலி யாகிய பௌந்திரனும் கேசிகமன்னனுகிய சாங்கிருதியும், பீஷ்மக னென்ற அரசனும், அவன் புத்திரனுகிய ருக்மியும், வேணுதாரியும் கிராதனும் அங்கவங்கதேசாதிபதிகளாகிய அம்ஷுமான் முதலியவ ர்களும் கோசலம், காசி, தசார்ணம், ஸும்ஹா முதலிய தேசங்களின் மன்னர்களும், விதா, மத்ர, திரிகர்த்த சால்வதேச மன்னர்களும் யவ னர்களுக் கதிபதியாகிய மகாபராக்கிரமசாலியான பகதத்தனும், சவ் வீரதேசமன்னனுகிய சைவ்யனும், பாண்டியதேசாதிபதியும், காந் தாரமன்னனுகிய சுவலனும், மகாபலனும், நாகனசித்தும், காஷ்மீர மன்னனுகிய கோனரத்தனும். தாரதேசமன்னனும், துரியோதனன் முதலிய தார்திராஷ்டிரர்களும் இன்னும் மற்றபராக்கிரமசாலிகளான ரதவீரர்களும், ஜனர்த்தனுக்கு விரோதமாகப் பொருமைகொண்டு ஜராஸந்தனுடன்புறப்பட்டு வாற்கோதுமை விறகுமுதலியவைநிறை ந்த தேசமாகிய ஸூரஸேனன் ராஜ்யத்திற்புகுந்து தங்கள் தங்கள் ஸைனியங்களை நடாத்திக்கொண்டு மதுராபுரியை முற்றுகைபோடச் சென்றனர்.

சி. நாராயணசாமி ஐயர். B. A. L. T.

அன்னையும் பிதாவும்.

(231-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தமட்டில் திருவருள் நிலையமாகிய பெற்றோரைத் தெய்வமாகக் காணவேண்டு முண்மை யறிவுறுத்தப்பட்டது. கண்கண்ட தெய்வமாகிய பெற்றோர்களிடத்தில், நாம் பிள்ளைப்பருவத்தில் இடையறாத பற்று வைத்திருந்ததினாலேயே, இப்போதுமதிக்கப்படத்தக்க மனுஷராயிருக்கிறோம். இவ்வுண்மையை மறந்து சில விடலைகள், பெற்றோர்களுடைய சகாயமின்றியே சீவித்துக்கொள்ளத் தக்கசாமர்த்தியம் தம்மிடத்திலுண்டாகும் காலத்து அவர்களைக் கைவிட்டு விடுகிறார்கள். தங்கள் பெண்டுபிள்ளைகளைப் பேணிக்கொள்வதில் மாத்திரம் அவர்களிடத்தில் சிரத்தை அதிகமாகக் காணப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இனிப் பெற்றோர்களா லாகவேண்டியது ஒன்றுமே இல்லை என்ற எண்ண முண்டாயிருக்கும்போலும். இவ்வாறு எண்ணுவது மௌடீகம். இனிமேல்தான் (அதாவது மனுஷரான பிறகுதான்) பெற்றோர்களால் முக்கியமாய் ஆகவேண்டியவைகள் உண்டு. அவை தாம் மேலான மனுஷப் பிறப்பின் பயன்களாகும். அவை வருமாறு:—

ஒவ்வொருவனுக்கும், மழலை-பாலை-விடலை-மூப்பு என்கிற நான்கு பருவங்களுண்டு என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஒவ்வொருவனும் மழலைப்பருவத்தில் (மூன்று வயதளவும்) ஊட்டிவளர்க்கும் அன்னையை விடாது தொடர்ந்து நிற்றலால் கீரிப்பிள்ளையைப் போலும், பாலைப்பருவத்தில் (எழுவயதளவும்) பெற்றோராலும், பெரியோராலும், உபாத்தியாயராலும் கற்றுக்கொடுப்பவைகளை அர்த்த ஞானம் இல்லாமல் விடாது படித்துக்கொள்ளுதலால் கிளிப்பிள்ளையைப்போலும், விடலைப் பருவத்தில் (முப்பது வயதளவும்) தன்னை மனிதராக்கி விட்டோருக்கு உபகாரமாயிருத்தலால் தென்னம்பிள்ளையைப்போலும், கிழப்பருவத்தில் (முப்பத்தொன்றாம் வயது முதல்ஆயுள்நாளளவும்) யாவரும் விரும்பப்படும்வாசனைவிளங்கநிற்றலால். *புழுதுப்பிள்ளையைப்போலும், பழையோராற்பேசப்படுகிறான். அந்நான்கு பருவங்களுள்ளே அறியாமையையுடைய இளம்பருவங்க

* புழுகுப்பிள்ளை - புனுகுப்பூனை.

ளாகிற முன்னையவிரண்டினிடத்தும், மக்களாலாம் பிரயோசனத்தைப்பெற்றோர் விரும்புகிறதில்லை. தாம் பட்டினிகிடந்தாவது,பிள்ளைகளுக்கு ஆகாரமும், அறிவும், ஊட்டிவளர்க்கும் தன்மையை அவர்கள் வகித்திருந்தார்கள். அப்பால் விடலைப் பருவத்தில் பிள்ளைகளுக்கு நாளுக்குநாள், அறிவும் திடனும் அதிகரித்தல்போல, பெற்றோர்களுக்குக் கிழப்பருவத்தால் நாளுக்குநாள் தளர்ச்சிமேலிடவும், பிள்ளைகளின்உபகாரத்தை எதிர்பார்க்கிறார்கள். அப்போதுபிள்ளைகள்

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்னும் சுருதி வாக்கை நினைந்து பெற்றோர்களைப் பேணி உய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்பொழுது தான்

'பெறுமவற்றுள் யாமறிந்த தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்றபடி பெற்றோர்கள் கொண்டாடுவார்கள். அப்படிக் கொண்டாடப்பட்ட பிள்ளைகளே பெரியோராலும் மதிக்கப்படுவார்கள். அல்லாதவர்கள் வளர்ப்போருக்கு எள்ளளவும் பிரயோஜனப்படாத அணிற்பிள்ளையை ஒப்பாரென்பது திண்ணம்.

ஈண்டு எடுத்துக்காட்டிய, கீரி, கிளி, தென்னை, புனுகு, அணில் என்னும் ஐந்து பிள்ளைகளில் தென்னம்பிள்ளையே பயன்றருவது கண்டாம். புனுகுப்பிள்ளையும் எவரும் விரும்பத்தக்க புனுகை யுபகரித்து நிற்கும். இவ்விரண்டும் நிற்க. ஏனைய மூன்றனுள், 'பயனற்றது அணிற்பிள்ளை'யென்றதனால் மற்றிரண்டும் பயனுற்றதாயிருக்கவேண்டுமே? 'கீரியும் கிளியும் வளர்ப்போர்க்கு என்னபயனைக் கொடுக்கின்றன?' எனின், கீரி வளர்ப்போர் மனையில் பாம்புகள் வராதென்று கேட்கப்படுதலாலும், கிளி பேசும்போதெல்லாம் வளர்ப்போருக்கு இன்பம் உண்டாவதாலும் அவையே பயன்களாமென்க. அணிற்பிள்ளை எதும் பிரயோஜனமற்றதென்பதற்கு, சில மூடப்பிள்ளைகள் வேடிக்கையாய்ப் பிடித்து வளர்த்துத் தொலைக்கிறதன்றி அதனை வளர்க்க எவரும் பிரியப்படாதிருப்பதே போதிய சான்றும்.

ஆதலால், தென்னம்பிள்ளையை ஒத்துப் பெற்றோர்களுக்கு உதவுகிற விடலைகளே அறிவறிந்த மக்களாவார்கள். அல்லாதவர் நன்றி

கொன்றவராவர். பிள்ளைகள் கைவிட்டுவிடுகிறதினால் பெற்றோர்கள் மரித்துப்போவதில்லை. பிள்ளைகளையே நம்பி அவர்கள் படைக்கப் படவுமில்லை. 'மரம் வைத்தவன் ஜலம் ஊற்றுவான்'. 'எவ்வுயிருங் காக்க ஒரு ஈசனுண்டு'.

இருந்தாலும், பயனில் மக்களைப் பயந்ததனிமித்தம் பலரும் தூற்றும்போது பெற்றோர்கள் உற்சாகமில்லாதவர்களாய் உட்புழுக்க முறுவர். அவர்கள் உள்ளம் புழுங்குமாயின் மாயா ஜாலங்கள் நம்மை ஆளும். அப்போது பலன்கொடாத பயிர்களில் மிருகங்கள் வீழ்ந்தாற்போல் நமது வாழ்வு அழிக்கப்படும். அத்தகைய கேட்டிற்கு ஆளாகாமல் 'தந்தைதாய்ப் பேண்' என்ற நீதியை அநுசரித்து நடந்துகொள்ளுகிறவர்கள்தாம் புத்திமான்கள் எனப் படுவர். அன்னோர் தாம் பெற்றோர்களால் ஆசிர்வதிக்கப்பெற்று சற்புத்திரர்களை உடையவர்களாவார்கள். சுபுத்திரர்களைப் பெற்றவர்களே கிழப்பருவத்தில் பாதுகாக்கப்படுவதுண்மை. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'. இது சத்தியம். பெற்றோர்கட்குக் கிழப்பருவத்தில் கீழ்ப்படிதலுடன் நம்மால் செய்யப்படுகிற வழிபாடுகள் அனைத்தையும் நாம் நமது கிழப்பருவத்தில் பிள்ளைகளால் செய்யப்பெறுவோம் என்பது நிச்சயம். கிழப்பருவத்தில் நாம் போஷிக்கப்படவில்லையானால் சீவிப்பதில்லை. அல்லாமலும் நாம்கஷ்டப்படுவதைக் காண்போர்களால், 'இட்டாருக்கு இட்டபலன்' என்று நிந்திக்கப் படுவோம். அத்தகைய கேட்டுக்கும் வசைக்கும் உள்ளாகாத நல்வாழ்வைப் பெற்றோர்களைப் பேணிப் பெற்றுக்கொள்ளல் அறிவுடையோர் கடனும்.

இங்ஙனமிருக்க, சிலர் பெற்றோரால் முழுதும் வெறுக்கப்பட்டு மற்றோருக்கு நல்லவர் போன்று இருக்கக் காண்கிறோம். அவர்கள் நடத்தையை யோசிக்குங்கால், அது, தன்னையே துணையாகக் கொண்டபுருஷனுக்குக் கீழ்ப்படியாத ஒருத்தி, துற்சனர் பலர்க்கு அடங்கி நடந்து நல்லபேரெடுப்பதை யொக்கும் என்பதில்ஐயமில்லை.

(இன்னும் வரும்)

த. ஆறுமுகநயினார்பிள்ளை.

எட்டயபுரம் சமஸ்தானம் பென்ஷன் லா எஜண்டும், சேற்றூர்ச்சமஸ்
தான மானேஜருமாயிருந்த, அருங்கலை விநோத உதாரகுணசீலராகிய

ஸ்ரீமாந் சி. இராக்கப்ப பிள்ளையவர்கள்,

சிவபத மடைந்தமை கேட்டு வருந்திக் கூறிய,

இரங்கற்பாக்கள்.

திருமலியு மிளசைநகர்ப் பேரரசி னிழலினுஞ் சிறந்த தென்றே
மருவுமிடிக் கொடியமா லுடையபஞ்ச தருநிழலில் வசிக்கச் சென்றாய்
தருமதயா நிதியாகு மிராக்கப்ப வள்ளலெவர் தமைப்போல் வாயோ
இருநிலமெ லாம்புகழும் பேரறிவிற் சிறந்துநீ யிசைத்தி டாயே. (௧)

கற்றவர்தங் கவியருமை தெரிந்துநீ யுபசரிக்கக் கண்டு பக்கத்
துற்றவருங் கேட்டவருங் கல்லாமற் கழிந்தநாட் குளம் வருந்தி
மற்றவரின் மேம்படுநூல் கற்கமுயல் வழக்கமினி மாறு மிங்ஙன்
உற்றவுனைப் போலொருவர்க் காண்கிலே மிராக்கப்ப வுதார மாலே. (௨)

நுண்ணறிவிற் சிறந்தகம்ப னுதியர்காப் பியங்களினி னுட்ப மாயுள்
ளெண்ணவமை கருத்தினைக்கண் டெடுத்துநம்போல் வார்க்கியுமறிஞரேறென்
றெண்ணலுறு மிளசைவெங்க டேசுரெட்ட னிறைமாட்சிக் கேற்ப யாது
முண்ணயந்து கொடுத்தெவரைக் கொள்வனினி யிராக்கப்ப வுயர்பூ மானே.

விருந்தோம்ப லற்றுரைத் தாங்கலெனுந் தொழிலையே விசேட மாக்கொண்
டிருந்தோயிவ்விரண்டினுக்கு மென்செயலாமென்றவிண்ணி லேகினாய்நாம்
வருந்தோறுங் குணநாடி யெனுங்குறளை மறந்தெம்பால் வழாது வைகும்
பெருந்தோமெலாஞ்சிறிதாக் கொண்டவிராக் கப்பவருட் பெருமைக் கோவே.

துன்றியதற் கிழமையாச் சுமந்தவுட லையுமிங்ஙன் றுறந்தா யென்னி [ர்
லொன்றியகம் போல்வாரைத் துறத்தலுனக் கரிதோவிவ் வுலகத் துள்ளோ
நன்றியறி வுள்ளாயென் றுனைச்சொலுஞ்சொற் பொருளினைநா நாடுங் காலை
வென்றியுறு மிராக்கப்ப மாலேயின் றிரட்டுறலாய் விளங்கிற் றன்றே. (௫)

தேசியலுஞ் சேவகப்பாண் டியமன்மா நேசரெனச் சென்று சேற்றூர்
வாசியா யவணமைச்ச ஞம்பழுசி யாண்டியொடு வைகுங் காலை
மாசில்வான் புகும்பொழுது கூடவே வருவலென வாய்மை மாற்றம்
பேசியிருந் தனைகொலிரு பத்திரண்டு நாட்குளவன் பின்சென் றாயே. (௬)

ஏற்பவர்வந் தாலன்பு காட்டுமுக மலர்ச்சியுட னினிய சொல்லுங்
கார்ப்பருவங் கண்டமயில் போலவருண் மகிழ்கருணை காட்டுங் கண்ணு
நூற்பரவை கடந்தபே ரறிவுமதி நுணுக்கமுமியா நுன்பா லன்பாற்
பார்ப்பதினி மேலுமுண்டோ விராக்கப்ப மன்னவா பகர்ந்தி டாயே. (௭)

ஆரைமறந் தாலுநினை மறவாத நெல்லைநெல்லை யப்ப வேளைச்
சீரைமரு வியகுன் னூர்க் குமாரசுவா மிக்கோவைச் சீர்த்தி யென்னூர்
தாரையணி வெள்ளகாற் சுப்பிரம ணியனுதி தமிழ்தே ருந்தக்
கோரைநீ மறந்ததற்கோர் காரணமென் னிராக்கப்ப வுசித மாலே. (௮)

பிறந்தநாண் முதலிறந்த நாள்வரையும் பிறரறியாப் பிறர்போ லாது
சிறந்தபுக ழாவிந்த வுலகமெலாந் தெரியுமுயர் செயலே செய்நின்
னறந்தழையுங் கங்கைகுலம் போலுன்னைப் பெறவான்செய் யறமி யாதோ
மறந்தவிரு மிராக்கப்ப வள்ளாலங் கேனுநீ வாழி யூழி. (௯)

எட்டய புரத்தை யிராக்கப்ப வேந்தல்கை
விட்டகன் றேசெள மியவருட—மிட்ட முறு
கார்த்திகைமா தத்துநான் காந்தெய்தி கண்டுவான்
சீர்த்திபெறச் சென்ற தினம். (௧௦)

சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவானும்,
மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோதகருமாகிய,
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

குணமிழந்த கொடியவரைக் குறுகியுடல் குறுகிமுகங்கோணி நல்லோர்
கணமிழந்து துயருழந்த கவிஞர்களைக் காக்கவந்த கருணைக் குன்றே
பணமிழந்த துயரொன்றோ நினையிழந்த பொழுதேயிப் பாவி யேம் பா
மணமிழந்து மதியிழந்து வாயிழந்தேம் ராக்கப்ப வரிசை மாலே. (௧)

புன்கவிக ளிடத்துமன்பு பாராட்டி யவர்புகலும் புரைப்பாட் டுள்ளும்
நன்கமையு நுண்பொருளை மதிவலியாற் கூறிநிதி நல்குங் கோவே
பொன்குலவு தென்னிளசை ராக்கப்ப புயலேயப் பொன்னாட் டுள்ளே
யென்கருதிப் போயினையோ விரப்பவராங் கிலரென்ப தெண்ணி டாயே. ()

அருந்ததிநேர் மனையாளு மமுதகுண மக்களுமுற் றவரு மன்பு
பொருந்தியழச் சிலரடையும் பொருணாடி யழவென்னைப் போல்வா ரிங்ஙன்
பிரிந்ததுயர் கருதியழக் கண்டுமிராக் கப்பவள்ளால் பெட்டு விண்ணோர்
விருந்துகொளச் சென்றனையே விலகாத கருணையெவண் விடுத்துற் றாயோ.

செல்விருந்தும் வருவிருந்து நாடோறுங் களிப்பநன்றி செய்து வாழ்ந்தாய்
பல்விருந்தும் பாவலரும் பரிதவிக்க விடுத்தமுத பான வாணர்
நல்விருந்தா யடைந்தனையே ராக்கப்ப வல்லோயுன் னுவா லூட்டுஞ் [ல்லாய்
சொல்விருந்துத் தெள்ளமுதச் சுவையினுமஃ தினிதேயோ சொல்லாய் சொ

சந்திரகா வியநூற்கு விருத்தியுரை வரைந்ததையித் தரைப்பா வாணர்
புந்திகொடு மகிழவரங் கேற்றுவது போதாது புலவர் நாட்டு
முந்துகுரு மதிமுதலோ ரவையேறிச் சுவையேற மொழிவா மென்று
சிந்தைகொடு சென்றனையோ ராக்கப்ப வள்ளானீ திரும்பி டாயே. (௬)

என்னுரிய தந்தைநிகர் தாயைநிகர் நெல்லையப்ப வியற்பா வல்லோன்
றன்னையுங்குன் னூர்க்குமர சாமிமுதல் வனையுமன்பு தணவா நட்பு
மன்னினையிந் நாண்மறந்து வானுற்றாய் நினதமுத வாயாற் கூறுஞ்
சொன்னிமிடந் தோறுமுன்னித் துடிக்கின்றேன் ராக்கப்ப சுகுண மாலே.

திருமருந்தான் மிடியென்னுங் கொடுநோயை விலக்கியுடற் றீய நோயைப்
பெருமருந்தால்விலக்கியெனைவாழ்வித்தபெருங்கருணைப்பெருக்கேநின்னை
யொருமருந்தா லுயிர்ப்பிப்பா ருற்றிலரே நீயொருவ னுற்று லந்த
அருமருந்தா யினுந்தருவா யெதுபுரிவோம் ராக்கப்ப அருமை மாலே. (எ)

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.
வித்தியாபாநுப் பத்திராதிபர், மதுரை.

சமாசாரக்கொத்து.

:o:

இங்கிலாந்தில் ஸாமர்ஸட்டின் ஒரு பகுதியில் உள்ள ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் பார்லிமெண்ட்மெம்பர் ஸ்தானத்தை அபேட்சித்து நிற்பவருள் மிஸ்டர் வால்டர் கிங் என்பவரும் ஒருவர். இவர் பிறவிக்குருட ராம். ஆயினும் பிரசங்கவன்மை பெரிதும் வாய்ந்தவராம்.

* * *

வட அமெரிகாவில் உள்ள ஐக்கிய மகாணங்களின் தலைநகராகிய வாஷிங்டனில் 79வயதுள்ள ஓர் கிழவி இவ்வருஷம் மெற்றிகுலேஷன் பரீக்ஷையில் தேறினள். இவள் இனி பீ. ஏ, பரீக்ஷைமுடியப் படிக்கப்போகிறாளாம்!. இவளதெண்ணம் இனிது நிறைவேறுக. "என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு?" என்ற நாயனார் வாக்குக்கு இலக்கியமாய் நிற்கும் இவளது நன்மாதிரியை நம்மவர்கள் பின்பற்றி நலமுறுவாராக.

* * *

சற்குணசீலரும் மகௌதாரியரும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்துவந்தவருமான ஆனரபிள் ஸ்ரீமத். எம். வேங்கட்டராமையர் அவர்கள் பி. ஏ. பி. எல். டிசம்பர்மீ 26உயன்று பூதவுடல் நீக்கிப் புகழுடம்பெய்தினர். இவரது அகால மரணத்தால் மதுரைக்கு மட்டுமேயன்றி தென்

னிந்தியா முழுமைக்குமே பெருத்த நஷ்டம். ஜஸ்டிஸ் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரின் நெருங்கிய பந்துவாயிருந்த "சின்ன" மணி ஐயருக்கு ஓர் அற்ப ரோஜா முள்ளே மரணத்தை விளைத்ததுபோல, ஸ்ரீ வெங்கட்டராமையருக்கும் பாதரட்சைக் கடியே பிராணனைப் போக்கிவிட்டது. இவர் ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி ஐயரின் சம்பந்தி. மிஸ்டர் எம். வி. முத்துராமலிங்கையர் பி. ஏ. பி. எல். லின் தந்தை. இவரது பிரிவாற்றாது வருந்துவோர்க்கு இறைவன் ஆறுதலளிப்பாராக.

* * *

போர்ச்சுகல்லின் துறைமுகப்பட்டினமாகிய ஒப்போர்டோவில் 5 ஸ்டீமர்களும், இரண்டு மரக்கலங்களும் முழுகிப்போயின. 7 ஸ்டீமர்களும் 3 மரக்கலங்களும் மணலுக்குள் புதைந்து அபாயகரமான நிலையிலிருந்து வருகின்றன. இவை பெரும்பாலும் பிரிடிஷ், ஜர்மன் கப்பல்கள் என்றுசொல்லிக் கொள்ளப்படுகின்றன.

* * *

ஸ்விட்சர்லண்ட் தேசத்தில் ஓர் புதுமாதிரியான கடியாரம் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதற்கு முள்ளுகள் கிடையா. மணி அறியவேண்டுமானால் அதில் காட்டப்பட்ட ஓர் குறித்த இடத்தில் அழுத்தினால் மணி இத்தனை என்று அது சொல்லிவிடுகிறதாம்.

* * *

ஆகாயக்கப்பல் செய்கின்ற புது வகையைப் படிப்பதற்காக ஜப்பானிலிருந்து 30 பேர் ஜெர்மனிக்குப் போயிருக்கிறார்கள்.

* * *

12 வருஷங்களுக்கு முன் ஜப்பான் இராஜ்ஜியம் 3,20,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருந்தது. அது சீனாவோடு யுத்தம் செய்து ஜயமடைந்தபின் 35,000 சதுரமைல் அதனோடு சேர்க்கப்பட்டது. ருஷியாவுடன் யுத்தம்செய்தபின் பின்னும் 250,000 சதுரமைல் அதனுடன் சேர்க்கப்பட்டது. ஆகவே ஜப்பான் ராஜ்யம் இப்பொழுது ஏறத்தாழ முன்னிலு மிருமடங்கு விஸ்தாரமுள்ளதாயிற்று.

* * *

டிசம்பர்மீ 22வயன்று பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த நாசிக் ஜில்லாவில் கலெக்டர் வேலை பார்த்துவந்த மிஸ்டர் ஜாக்ஸனை 18வயதுள்ள ஓர் பிராமண வாலிபன் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றான். அவனும் இன்னும் அநேகரும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். விசாரணை நடந்துவருகிறது.

* * *

வங்காளத்தைச்சேர்ந்த ஹௌரா மாகாணத்தில் சம்புலால் சக்கரவர்த்தி என்னப்பட்ட ஓர் பிராமணர் நூற்றுப்பத்து வயதுடையவராய் நாளிது

மாதம் 26௳ இறந்துபோயினர். இவர்க்கு 3 குமாரர் 2 குமாரத்திகள். 86-ம் வயதில் இவர்க்குக் கடைசிப்பிள்ளை பிறந்ததாம்.

* * *

ஆகாகான் டிரான்ஸ்வால் கிமிட்டி மெம்பர்களில் ஒருவராய்ச் சேர்ந்து விட்டாரென்றும், அவர் அக்கிமிட்டிக்கு 4000 ரூபா நன்கொடையளித்திருக்கிறார் என்றும் தெரிகிறது.

* * *

மதுரைஜில்லா பரமக்குடியில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீபுகோர்ட் அடுத்த கோடைகாலவிடுமுறை சமீபிக்கும் வரை அவ்வூரில் நடைபெற கவர்ன்மெண்டார் உத்திரவளித்திருக்கிறார்கள்.

* * *

வடகரை, தொட்டப்பாயக்கனூர் இவைகளின் ஜமீந்தாரும், நன்கு கற்றவருமாகிய ராவ்பகதூர் மிஸ்டர் வி. இராமபத்திரநாயுடுகாரு தென்னிந்திய ஜமீந்தார்களின் பிரதிநிதியாக சட்டநிரூபணசபைமெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதறிந்து சந்தோஷிக்கிறோம்.

* * *

டிசம்பர்மீ 27௳ யன்று லாகூரில் 25-வது காங்கிரஸ்கூட்டம் ஆரம்பித்தது. இந்தக்காங்கிரஸ் மகாசபையின் சபாநாயக ஸ்தானத்தை மதன்மோகனமாலவியா என்ற கனவான் வகித்தார். இவர் லாகூர் ஸ்டேஷனில் வந்திறங்கினதும் உபசாரணைக்கம்மிட்டியின் சேர்மென் லாலாஹரி கிருஷ்ணலால் என்பவரும் மற்றும் பெரிய கனதனவான்களும் ஆரவாரங்களுடன் எதிரேற்று உபசரித்து அழைத்துப்போனார்கள். நூதன சீர்திருத்த ஒழுங்குகளின் குறைகளும் டிரான்ஸ்வால் இந்தியர்களின் கஷ்ட நிவாரணங்களும் வங்காளப்பிரிவினைக் கண்டனமும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருப்பவர்களை விசாரித்துத் தண்டிக்கவேண்டுமென்ற விஷயமும் இராணுவச்செலவைக் குறைக்கவேண்டிய விஷயமும் பெரிய உத்தியோகங்களை நம்மவர்களுக்குக் கொடுக்கவேண்டியதென்றதும் முதலான பலவிஷயங்கள் பேசப்பெற்றுத் தீர்மானிக்கப்பட்டன. இவ்வருஷம் இதற்கு வந்திருந்த பிரதிநிதிகள் மொத்தம் இருநூறுபேரும் பார்க்க வந்தவர்கள் ஐந்நூறுபேரும் ஆகமொத்தம் எழுநூறு பேருக்கு அதிகமில்லையென்று சொல்லப்படுகிறது. அடுத்த காங்கிரஸ் அலகாபாத் நகரத்தில் கூடவேண்டுவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

பத்திராதிபர்.